முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**04.04.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. தரும சக்தியே அரங்கராசா
   தரணி காத்திடும் ஞான தேசிகா
   பெருமை மிக்க உன் வழியில்
   பேருலகோர் வருக மாற்றம் எனக் கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
   குறைவிலா சார்வரி சேல்திங்கள்
   இருபானீர் திகதி கதிர்வாரம்
   (சார்வரி வருடம் பங்குனி மாதம் 22ம் நாள், 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை)
   இயம்பிடுவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை வியாசமுனிவர் யானும்
   அருளுவேன் உலகநலம் பெற
   வாசிவென்ற தலைவன் துணை
   வல்லமைபட கொண்ட அரங்கனே
4. அரங்கனே அன்ன சேவையில்
   அகிலமே பசிபிணி அகன்று
   வரங்கள் பெற்று வருகவே
   வையகமே உன் கொள்கை வழி
5. வழிதனில் ஞான ஆட்சியாக
   வளரும் மலரும் சடுதி
   அழிவில்லா ஞானம் தரும்
   அரங்கனே உன்பதம் பற்ற
6. பற்றவே பற்று நீங்கி
   பாருலகோர் தனித்துவம்பட
   மாற்றம் ஏற்றம் ஞானவழி
   மண்ணுலகோர் அடைவரப்பா
7. அப்பனே அண்டமதின் பேரிடரை
   அகற்ற வந்த குரு நீ
   காப்பென உன் திருவடியை
   கண்டடைந்த மக்களுக்கு
8. மக்களுக்கு துன்பநிலை அகலும்
   மறுக்கா வரங்கள் கிட்டி
   ஆக்கமுடன் தேகமனோபலம்
   ஆயுள் கீர்த்தி சகல வளமும்
9. வளமும் வாழும் காலமே
   வடிவேலனை காணும் வாய்ப்பும்
   பலமான குருவருள் துணையும்
   பழுதில்லா தொடர்ந்து வரும்

10. வருகவே பிரணவக்குடிலுக்கு
வருபவர்க்கு மெய்ஞானமதும்
முருகப்பெருமானால் அருளப்படும்
மேலவர்கள் ஆகும் சக்திகூடி

11. கூடியே பிறவாப் பேறு
குருவரங்கன் தயவால் கிட்டும்
தேடிவாரீர் அரங்கன் திருவருள் நோக்கி
தெரிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—